மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில், தொழில் பழகிய கைவினைஞர்களுக்கான வேலை வாய்ப்பு குறித்து, ஆழ்ந்த ஆய்வு ஒன்று, 1967 ஆம் ஆண்டு ஏப்ரல்/ஆகஸ்டு திங்களில் நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், 1964, 1965 ஆம் ஆண்டுகளில் தேர்ச்சி பெற்ற தொழில் பழகியோரும் அடங்குவர். தேர்ச்சி பெற்ற 197 கைவினைஞர்களிடம், அவர்கள் எந்த வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர், அவர்கள் பெறும் சம்பளம் எவ்வளவு, வேலை குறித்து அவர்களுடைய மனநிறைவு முதலியவை குறித்த தகவலை அஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டு அது குறித்த வினுப்பட்டியல் ஒன்றும் அனுப்பப்பட்டது. அவர்களில் 117 பேர் பதிலளித்தனர். அவர்கள் அளித்த பதிலில் விருப்பு வெறுப்பு அற்ற முறையில் அமைந்துள்ளதா என்று பார்த்து உறுதி செய்வதற்காக, அவர்கள் எந்த நிறுவனங்களில் பணிபுரிகிறுர்களோ அந்த நிறுவனங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டதன் மூலம், பூர்த்தி செய்து அவர்களால் அனுப்பப்பட்ட வினுப்பட்டியலில் ஒரு சதவீதம் சரி பார்க்கப்பட்டது.

(உ) இவ்வினு எழவில்லை.

Aluminium Paste Plant.

* 143 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Aluminium Paste Plant near Tirumangalam in Madurai District, has been commissioned about November 1971;

(b) if so, to furnish the details regarding—

(i) when the Plant actually went into production;

(ii) the total outlay;

(iii) the production per year;

(iv) the capital invested;

(v) the details of the collaborators; and

(vi) the market facilities available for the product?

அலுமினியம் தொழிற்சாலை

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டம் திருமங்கலத்துக்கருகிலுள்ள அலுமினியம் தொழிற்சாலை 1971, நவம்பர் மாத அளவில் உற்பத்தியைத் தொடங்கி விட்டதா?

1972 ஆகஸ்ட் 21]

(இ) ஆமெனில், கீழ் குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவை?

(i) தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கிய தேதி என்ன?

(ii) மொத்த செலவு எவ்வளவு?

(iii) ஆண்டொன்றுக்கு உற்பத்தியளவு எவ்வளவு?

(iv) இத்தொழிற்சாலைக்கான செலுத்தப்பட்ட மூலதனம் எவ்வளவு?

(v) உடனுழைப்பாளர்கள் பற்றிய விவரங்கள் யாவை?

(vi) உற்பத்திப் பொருள்களுக்கான விற்பனை வசதிகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் உள்ள "தி மெட்டல் பவுடர் கம்பெனி லிமிடெட்" "அலுமினியம் பேஸ்ட்" உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை 1970-ம் ஆண்டில் தொடங்கியது.

(இ) (i) அத்தொழிற்சாலை 1970-ம் ஆண்டு உற்பத்தி செய்யத் தொடங்கியது.

(ii) தொழிற்சாலையின் மொத்த மதிப்பு ரூ. 50 லட்சம்.

(iii) அத்தொழிற்சாலையின் தற்போதைய உற்பத்தித் திறன், நாள் ஒன்றுக்கு 3 டன்கள்.

(iv) தொழிற்சாலையின் முதலீட்டுத் தொகை ரூ. 50 லட்சம்.

(v) இத்தொழிற்சாலையில் அன்னிய தொழில் நுணுக்கம் இல்லை.

(vi) இப்பொருளுக்கு தென்னகத்தில் கிராக்கியில்லாததினால் இந்தக் கம்பெனி தனது உற்பத்தித் திறனில் 25 சதவீத உற்பத்தியை மட்டும் செய்து வருகிறது. இந்தக் கம்பெனி அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமா என்று ஆராய்ந்து வருகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் செய்யப்படும் உற்பத்திப் பொருள்கள் பட்டாசுத் தொழிலுக்கு அடிப்படையான மூலப்பொருளாக இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, என்னென்ன தொழில்களுக்கு என்று இல்லை. அதிகமாக இந்தப் பொருள்களை வாங்கக் கூடியவர்கள் இன்டியன் அலுமினியம் கம்பெனி, பம்பாய்,

கோசலா மெடல் பவுடர் கம்பெனி, நாக்பூர்—இவர்கள் இதை உற்பத்தி செய்கிறார்கள். எந்தெந்த கம்பெனிகள் என்னென்ன தேவைகளுக்காக வாங்குகிறார்கள் என்பது பற்றிய விவரமில்லை.

Training Centre for the Manufacture of Temple Cars (Rathas).

* 144 Q.—THIRU K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any training centre for the manufacture of temple cars (rathas) is run by the Government; and

(b) if so, the details thereof?

கோவில் தேர்கள் தயாரிப்பதற்கான பயிற்சி நிலையம்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவில் தேர்கள் தயாரிப்பதற்கான பயிற்சி நிலையம் ஏதேனும் அரசால் நடத்தப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) அண்டு (இ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கோயில் தேர்கள் (ரதங்கள்) செய்வதற்கான பயிற்சி நிலையம் ஒன்றைத் தமிழக அரசு நடத்தி வருகிறது. இந்நிலையத்தில் 10 பேர்களுக்கு மூன்று ஆண்டுக்காலம் பயிற்சி கொடுக்கப்படுகிறது. பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 பயிற்சி உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல தேர்த் தொழிற்சாலை நிபுணர்கள் இருக்கின்ற நிலைமையிலே, தென் பகுதியில் இருப்பதோடுமட்டும் அல்லாமல், நடுப்பகுதியிலும் இது மாதிரி ஒரு தயாரிப்புத் தொழிற்சாலை ஏற்பாடு செய்யவோ அல்லது திறமைசாலிகளுக்கு ஊக்க ஊதியம் கொடுக்கவோ அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா, இல்லாவிட்டால் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இது போன்ற தொழிற்சாலை ஒன்றும் தொடங்குவதாக இல்லை. ஆனால் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற எல்லோருக்கும் பின்னால் வேலை